**நீதித்துறை நடுவர் எண்.II, நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.C.தினேஷ்குமார் B.A.,L.L.B.(Hons.).,LL.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.II , திண்டுக்கல்.**
**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 09–ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**Crl.M.P.No.1257/2026**
**CNR No. TNDG03-003228-2026**

கௌரிசங்கர் (32/2026)
த/பெ.ராமமூர்த்தி,
அருணா நகர், பெரியதோட்டம்,
சின்ன காஞ்சிபுரம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

. . . மனுதாரர் / எதிரி

/எதிர்/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
மாவட்ட குற்றப் பிரிவு காவல் நிலையம்,
திண்டுக்கல்
குற்ற எண். 23/2024
சட்டப்பிரிவுகள் 418, 420 of IPC @ 406, 420, 465, 468, 471 of IPC

. . . வாதி / முறையீட்டாளர்

இம்மனுவானது 02.06.2026–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.விக்னேஷ் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை.2 அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1) மனுதாரர் / எதிரி தரப்பில் நிபந்தனையை தளர்வு செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பதில் பெறப்பட்டது.

3) மனுதாரர் / எதிரி நிபந்தனையை தளர்வு செய்யக்கோரிய மனுவில் , மனுதாரர் / எதிரி மீது திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்.23/2024 சட்டப்பிரிவுகள் 418, 420 of IPC @ 406, 420, 465, 468, 471 of IPCன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு கடந்த 28.11.2025ம் தேதி நீதிமன்ற காவலில் உட்படுத்தப்பட்டதாகவும், பின் மனுதாரர்/ எதிரிக்கு கடந்த 30.01.2026ம் தேதியன்று சமூகம் நீதிமன்ற Crl.M.P.No.176/2026–ன் படி பிணை வழங்கப்பட்டு, Crl.M.P. No.742/2026, 02.04.2026 தேதிய உத்தரவுப்படி பிணை தளர்வு செய்யப்பட்டு, மதுரை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் தினமும் காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தொடர்ந்து 30 நாட்களுக்கு கையொப்பம் செய்ய வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டதாகவும், மனுதாரர்/ எதிரி தற்போது வரை நிபந்தனைகளை கடைபிடித்து வருவதாகவும், மனுதாரர்/ எதிரி காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் என்பதால் மதுரையில் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது சிரமமாக உள்ளதாகவும், மேலும், மனுதாரர்/ எதிரி நீரிழிவு நேயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவரது உடல்நிலை நாளுக்கு நாள் மிகவும் மோசமடைந்து வருவதாகவும், மனுதாரர்/ எதிரி வழக்கு விசாரணைக்கு தவறாது ஆஜராவார் என்றும், எனவே மனுதாரர்/ எதிரிக்கு Crl.M.P. No.176/2026 மற்றும் Crl.M.P. No.742/2026 ல் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளை தளர்வு செய்யக்கோரி மனுதாரர்/ எதிரி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) பதில் அறிவிப்பில் இவ்வழக்கு விசாரணையில் இருந்து வருவதாகவும், எதிரிக்கு நிபந்தனை தளர்வு வழக்கினால் மீண்டும் இது போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும் எதிரிக்கு பிணை தளர்வு வழங்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

5) கற்றிந்த அரசு வழக்கறிஞர் தனது பதில் அறிவிப்பில், மனுதாரர் / எதிரிக்கு நிபந்தணை தளர்வு வழங்கினால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடபடக்கூடும் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி சாட்சியங்களை கலைக்கக் கூடும் என்பதாலும், வழக்கு

விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக் கூடும் என்பதாலும், பிணை தளர்வு வழங்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

6) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இருதரப்பு வாதத்தினை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், மனுதாரர் / எதிரி இந்நீதிமன்ற Crl.M.P. No.742/2026 தேதி: 02.04.2026 உத்தரவின்படி கடந்த 03.04.2026 முதல் 05.05.2026 வரை தொடர்ந்து 30 நாட்களாக மதுரை, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்பதைக் கருத்திற்கொண்டும், மனுதாரர்/எதிரி நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு தொடர்சிகிச்சை மேற்கொண்டு வருகிறார் என்ற எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தினை கருத்திற்கொண்டும், மனுதாரர்/ எதிரியின் உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும், மனுதாரர்/ எதிரி வழக்கு விசாரணைக்கு தவறாது ஆஜராவர் என்ற எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தினை கருத்திற்கொண்டும், மனுதாரர்/ எதிரிக்கு கடந்த 30.01.2026ம் தேதியன்று கனம் நீதிமன்ற Crlmp.No.176/2026 மற்றும் கடந்த 02.04.2026ம் தேதியன்று கனம் நீதிமன்ற Crlmp.No.742/2026 உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனையை நீதியின் நலன் கருதி முழுமையாக தளர்வு செய்து இந்நீதிமன்றம் இதன்மூலம் உத்தரவிடுகிறது.

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் செவ்வாய்க்கிழமை 09-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.09 13:22:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்